Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 212/2025 PW-4**

Name : நவீன்
Father / Husband name : பெருமாள்
Village : மேல்அத்திப்பாக்கம்
Age : 21
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 09.03.2026

A1, A2 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கல்லூரியில் படித்துவருகிறேன். அ.சா.1 எனது அப்பா. சாட்சிகள் ஸ்ரீபிரியா, ஏழுமலை, முனுசாமி ஆகியோர்கள் எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் எனது அத்தையின் கணவர் இறந்துவிட்டதால் மேல்பேரடிக்குப்பம் கிராமத்திற்கு நானும எனது அப்பா, அம்மா ஆகியோர்கள் சென்றோம். ஊரிலிருந்த சிவன் கோவில் அருகே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அதில் யாரோ என்னை கீழே தள்ளிவிட்டார்கள். அதில் எனது இடது கையில் அடிப்பட்டது. பின்னர் என்னை ஆம்புலன்சின் மூலம் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 03.07.2023 அன்று மேல்பேரடிக்குப்பம் கிராமத்தில் சவஊர்வலம் சென்றபோது அன்றையதினம் மாலை 7 மணிக்கு எதிரிகள் இருவரும் ஊர்வலத்தை தடுத்து உங்கள் அப்பாவை அசிங்கமாக திட்டி கன்னத்திலும், முதுகிலும் அடித்தார்கள் என்றும், பின்னர் அதனை நீங்கள்

தடுத்தபோது எதிரி அலேக்சாண்டர் அடித்து கீழே தள்ளியத்தில் உங்களுக்கு இடது கையில் சூலம் பட்டு பலத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் எதிரிகள் இருவரும் உங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும், அடிப்பட்ட உங்களை 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று பின்னர் எதிரிகள் மீது எழுத்துப்பூர்வமாக அப்பா புகார் கொடுத்தார் என்றும், அந்த புகாரின்பேரில் போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.